32

10 AUG 1922

ஸ்ரீ முருகன்துணை

# விநோத பரமாநந்த கீர்த்தனை.

உத்தமபாளையம், நாடகாசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ

**U. P.** காமாக்ஷிபிள்ளையவர்கள்

இயற்றியது.

மதுரை புக்ஷாப்

பி. நா. சி. ஏஜண்டு

...ஷ்ணபிள்ளையவர்கள்

வெளியிட்டது.

ரிஜிஸ்டார்டு காபிரைட் [அணா 5

1922

Q2: 417
N22
97198

அச்சிலிருக்கிறது. எதிர்பாருங்கள்

# கூடிய சீக்கிரம் வெளிவரும்.

கன்னி ஜமீன் சரபம் மகா-ா-ா-ஸ்ரீ

## உடுமலை. முத்துசாமிக்கவிராயர் அவர்கள்

மாணாக்கர் R. K. பூமிபாலக தாஸ் இயற்றிய

பாசுரசேகர பத்திரால கீதமெனும் பத்திரலக்கீர்த்தனங்கள்.

| | | |
|---|---|---|
| முதற்பாகம் ... | ... விலை ரூ. | 0—5—0 |
| இரண்டாம்பாகம்... | ... ,, | 0—5—0 |

ஷெ்டிபார் இயற்றிய அடியிற்கண்ட

## 13-டிராமா சரித்திரங்கள் நூதன வர்ணமெட்டு களால் அமைக்கப்பெற்றவை.

1—சதாரம் சரித்திரம்
2—வள்ளி சரித்திரம்
3—நல்லதங்காள் சரித்திரம்
4—கோவலன் சரித்திரம்
5—லவிதாங்கி சரித்திரம்
6—சாரங்கதரன் சரித்திரம்
7—அல்லி சரித்திரம்
8—பாரிஜாத புஷ்ப ஹரணம்
9—சகுந்தலா சரித்திரம்
10—சத்தியவான் சாவித்திரிசரித்திரம்
11—ஞானசௌந்தரி சரித்திரம்
12—தாராசசாங்க சரித்திரம
13—நள தமயந்தி சரித்திரம்

## மு. கிருஷ்ண பிள்ளை.

ஏஜண்ட், பி. நா. சிதம்பர முதலியார் அன் கோ,

பிரின்டர்ஸ், பப்ளிஷர்ஸ் அண்ட் புக்ஸெல்லர்ஸ், மதுரை.

உ

சிவமயம்

ஸ்ரீ முருகன் துணை.

# விநோதபரமாநந்த கீர்த்தனை.

இஃது

பெரியகுளம் தாலுகா உத்தமபாளையம்

பழனியாண்டி பிள்ளையவர்கள்

குமாரர் டிராமா உபாத்தியாயர்

**கனம் U. P. காமாக்ஷி பிள்ளை**

அவர்களாலியற்றப்பெற்று

மதுரை புஸ்தக ஷாப்

பி. நா. சி. ஏஜண்டு

**மு. கிருஷ்ண பிள்ளையவர்களால்**

திருமங்கலம் ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] [அணா-5

ரிஜிஸ்டர் காபிரைட்.

10 AUG 1922

உ
சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

அனுமந்தநகரம்—வித்வான்
ஸ்ரீ-அந்தோனிமுத்துப் பிள்ளையவர்களியற்றிய
சாற்றுக்கவி.

சங்கினங்கள் முத்துயிர்க்கும் கழனிகள்
பாளையத்திற் றழைத்தே யோங்கும்
கங்கைகுல மரபுதனில் வந்துதித்த
காமாக்ஷி கவிஞன் சொல்லும்
மங்களவி நோதபர மானந்தக்
கீர்த்தனையின் வாக்கின் சாரம்
துங்கமிகும் பாகுதனிற் கற்கண்டு
கலந்த தெனச் சொல்லலாமே,

உத்தமபாளையம்
ஸ்ரீ-U. P. அப்பாவுஉபாத்தியாயரவர்களியற்றிய
சாற்றுக்கவி.

மாமாக்ஷி பெற்றுவளர் பாளையம் பதிவாழ்
காமாக்ஷி பிள்ளைக் கவிராயர்—தாமாய்ச்செய்
வாக்கிசைவி நோதபர மானந்தக் கீர்த்தனையின்
வேதக் கினிக்குந் தேனின் சுவை.

---

☞ இதில் வர்ணமெட்டு தெரியாத பாடல்களை உத்தமபாளையம் T. M. P. வேலுச்சாமி பிள்ளை அவர்களிட்டமும், மதுரை தெற்குவாசல் R. துரைக்கண் பிள்ளை அவர்களிடமும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

17198

உ

சிவமயம்.

ஸ்ரீமுருகன் துணை.

# விநோதபரமானந்தக்கீர்த்தனை.

## விநாயகர் துதி.

குணவதி யுமையவள்
மணமுட னருளிய
கணபதி யுனதிரு
இணையடி துணையே.

## சரஸ்வதி துதி.

வெண்பா.

மாமறையோ னாவுதனில் வாழுங்கலைமகளே
பூமலர் கொண்டுன்னடியைப் பூஜித்தேன்—நேமிதனில்
ஏதுமறியாச் சிறுவனென்னுடைய வாக்கினுளே
நீதமுடன் வந்தருள்வாய் நீ.

## (குருவணக்கம்)

திருப்பரங்கிரி செவ்வேளருளினல்
விருப்பமாய்த்தமிழ் வித்தைகற்பித்தநல்
பொருப்பைநேர்புய பூமணமென்குரு
கருப்பணமுகில் காலிணைபோற்றுவாம்.

---

## அவையடக்கம்.

ஐந்தருகனக்கு முன்பு அரம்பையும் வளர்தல் போலும்
விந்தைசேர் வாரிமுன்பு வெள்ளமும் வருதல் போலும்
சுந்தர நிலவு முன்பு சுடர்விளக்கெரிதல் போலும்
செந்தமிழ் வாணர் முன்பு சிறுவன்யான் பகரும் நூலே.

---

## சுந்தரகணநாதா என்றமெட்டு.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

**பல்லவி.**

மூஷிகவாகனனே மூலாதாரனே
முக்கண்ணன் சுதனே (மூஷிக)

**அநுபல்லவி.**

வாசமலர்தூர்வி வந்தனைசெய்தேனே
வாஞ்சையொடுநல்ல வரந்தா சீமானே (மூ)

**சரணம்.**

மால்மருமகனே வாசெஜமுகனே கார்விநாயகனே
பால்மொழி வல்லபை பாகத்தமர்ந்தவா
பாவலன் [illegible] [illegible]துகந்தவா (மூ)

இராகம்—ஆரபி-தாளம்-ஆதி.

## ஆருக்குத்தான்தெரியு மென்றமெட்டு.

பல்லவி.

பாரதிநீதுணையேபனிமலர்தூவியே பணிந்தேனானுனையே

அநுபல்லவி.

நாரணன்மகனுக்குகந்த சிங்காரியே
நாவில் வந்தருளுவாய் கவிதனைக்கூறியே

சரணம்.

பத்மமலர்மீதுமேவுங் கீர்வாணி
பாதுகாத்தருள்வாய் புஸ்தகபாணி
வித்வஜனர்புகழ் வேதபுராணி
விற்பனன்காமாக்ஷி போற்றுங்கல்யாணி(பாரதி)

---

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்—ஏகம்.

## துலங்குசெம்பொன் என்றமெட்டு.

கண்ணிகள்.

அனந்தங்கோடி முனிவர்கள் புகழும்
அருணாசலமேவிய அரனே உன்பாதம் தஞ்சமே
கிருபா கடாக்ஷம் அடியேன்மேலில்லை கொஞ்சமே

அரஹரவெனுமொழி அனுதினமுழங்கிடும்
அருணாசல மேவிய அரனேஉன்பாதம் தஞ்சமே
கிருபாகடாக்ஷம் அடியேன்மேலில்லை கொஞ்சமே

அகத்தினில் நினைத்திடில் வரத்தையுமளித்திடும்
அருணாசலமேவிய அரனேஉன்பாதம் தஞ்சமே
கிருபாகடாக்ஷம் அடியேன்மேலில்லை கொஞ்சமே

ஆதிநெடுமாலயனும் காணமுடியாததிரு
அருணாசலமேவிய அரனே உன்பாதம் தஞ்சமே
கிருபாகடாக்ஷம் அடியேன்மேலில்லை கொஞ்சமே

உனைநானும் தினமேகொண்டாடி
உயர்வாக பணிந்தேன்முன்னாடி
இனிநீயும்விரைவாய் வந்தோடி
எழிலுடன்காமாக்ஷி பண்பாதம்சூடி
எனையாள்வதி லென்னமோடிமனதிரங்கி
எனையாள்வதி லென்னமோடி(அனந்தம்)

---

இராகம்—தேசிகதோடி-தாளம்-ஏகம்.

காந்திமகா னென்ற மெட்டு

பல்லவி.

பாராமுகமேனையா பகருவாய் வேலனே

அநுபல்லவி.

ஈராறுகையா எழில்மேவுந்துய்யா
இனியெனக்குமேவேறுகெதியாறு பதில்கூறுதுயர்தீரு
இளமாதுவள்ளிசமேதா மயில்மீதுஏறும்விநோதா
எழியேனுனையேதினமே தொழுதேன்வரமேதருவாய்
ஏகா தவயோகா திகழ்வாகா மதியூகா
(இன்னம் பாராமுகம்)

சரணம்.

கவிவாணர்நேசன் காமாக்ஷிதாசன்
கழல்பணிந்திடும்நாதா குணநீதா மலர்ப்பாதா பிரக்யாதா
திருக்கார்த்திகைக்குமரேசா உனைப்போற்றினேன்பிரகாசா
கதியேதருவாயினியே கழுகாசலம்வாழ்துரையே
கருவே மலர்மருவே உயர்திருவே முனிகுருவே
(இன்னம்பாராமுகம்)

---

இராகம்—பியாக்ஷி-தாளம்-ஆதி.

சாமிவிவேகானந்த மென்றமெட்டு.

பல்லவி.

காசி விசாலாக்ஷியே கார்த்தருள்கடாக்ஷியே
காலந்தோறும்பாலனுனே சீலமோடுபோற்றினேனே (கா)

கங்காளன்கொஞ்சும் பாரி
சிங்காரமுள்ள நாரி
கருணை வாரி

காகுத்தன்சோதரியே சேவித்தேன்மாதரியே
நீடித்தேஆதரியே காக்ஷிதந்து
காலந்தோறும்பாலனுனே சீலமோடுபோற்றினேனே (கா)

சற்ஜனர் சாவகாசன்
தனயன்காமாக்ஷி தாசன்
சற்கு ணளன்

தண்டமிழ்கேட்பாய்நீயே அண்டர்கள்போற்றும்தாயே
இன்றெனைரக்ஷிப்பாயே சந்தோஷமாய்
தருணமுனதுபாதம்நானே சிரசுதனிலேசூடினேனே(கா

---

## தாதாபாய்நௌரோஜி என்றமெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம்—சாப்பு

பல்லவி.

வேண்டினே னுன்பாதம்
வேலாயுதனே கோலாகலனே (வே)

அநுபல்லவி.

ஆண்டவன் சந்ததியே அமரர்சேனாபதியே
ஆடுமாமயில் மீதிலேறியே ஆளுவாயெனைவேளைதோறுமே

## தொகையறா.

உலகோர்புகழ்ந்திடும்ஜெகதீசன்செவிதனில்உபதேசம்செய்தவீரா
ஒருமாங்கனிக்குமே புவிதோறுஞ்சுற்றியே ஒயிலாகவந்ததீரா

பழனம் நிறைந்துசூழும் பாளையம்பதியில்வாழும்
பாலன்காமாக்ஷிதாசன்கூறிடும் பாடலாவலாய்கேளும்நீயிளி

---

## ஆண்டிப்பண்டாரமென்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி—தாளம்—சாப்பு.

பல்லவி.

சூரசம்மாரா எனைக்காரு மொய்யாராவீர (சூர)

அநுபல்லவி.

வேறொரும் துணையில்லையே வேண்டியுமனம்வல்லையே
ஆரோடு முறையிடுவேன்ஐயோ என்னதொல்லையே (சூ)

சரணம்.

உலைவாய்மெழுகுபோலே உருகுறேன்கவலையாலே
தலையாறுடையவனே தயவுனக்கில்லையென்மேலே (சூ)

அவனிதனில் நானும்நித்தம் ஆறுபிழைநூறுகுற்றம்
கவனியாமல்செய்தபோதும்கருத்தினில்வேண்டாம்வருத்தம்

காமாக்ஷிதாசன்செப்பும் கவிமாலைதன்னையொப்பும்
சீமானே எந்தன்மீது சிறிதளவில்லையே நட்பும் (சூ)

---

## அமாரநபி என்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்—சாப்பு

பல்லவி.

முருகனையே பாடி முத்தியடைவாயே (முரு)

அநுபல்லவி.

உரகர்விஞ்சையர்பூகர் உம்பர்மனங்களிக்கும்
பரங்கிரிதன்னில் நாளும் பாக்யமிகவளிக்கும் (முரு)

## தொகையரா.

அமரேசன்குறைதீர ஒயிலீரகஜெகமீது அவதாரம்செய்தவேலன்
அடியார்கள்வினைஏக அழகானமயிலேரிஅவிர்ப்பாகமளிக்கும்சீலன்

சிங்காரக்கீர்த்தனங்கள் திவ்யமுடனே சாற்றும்
கங்கைகுலதிலகன் காமாக்ஷி தாசன்போற்றும் (முரு)

---

## பாண்டிய னீன்ற மீனாக்ஷி என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி—தாளம்—ஆதி.

### பாட்டு.

தில்லைபோல்தலமும் வேறேது வர்ணிக்கதிறமைபோதாது
பில்லியும்வந்தணுகாது நடேசன் பேர்சொன்னபோது (தி)

### தொகையரா.

முந்தியோர்காலத்தில்நந்தனார்சேவித்துமுத்தியும்பெற்றக்ஷேத்ரம்
பந்தபாசங்களைவேரோடுநீக்கியே பகர்ந்திடுவாயே தோத்ரம்

பூலோகபுண்யகைலாசம் கண்டாலே
போகுமே தோஷம்
சாலோகபதந்தரும் தேசம்எப்போதும்
சாதுக்கள் வாசம் (பூலோக)

### தொகையரா.

சிதம்பரமென்றுமே ஒருதரம் நவின்றிடில் ஜென்மசாபல்யமாமே
தினசரிவந்துமே தெரிசனம்செய்திடில் தீவினைமுழுதும்போமே

சுந்தரிதெய்வானை மாமிகாமாக்ஷி
தொழுஞ் சிவகாமி

சிந்தைக்கிசைந்திடும் சாமிதாண்டவம்
செய்ததோர் பூமி (தில்லை)

---

## சரிசரி சாமுத்ரிகாலக்ஷணி என்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

பல்லவி.

அரஹரா அம்பிகைமனோகரா (அர)
அடியர்களின் குறைதீரவே விடைமீதினிலொயிலாய் வரும்

அநுபல்லவி.

சரியைகிரியையோகஞான சைதன்னியவஸ்துவே
தனுகரணபுவனபோக சைவசமயவித்துவே

சர்வகாரணு புண்யதர்மபூரணு
ஜகமாய்கையில்வருந்தாமலே சுகமாகவேஎனையாதரி (அர

சரணம்.

காமகுரோதலோபமோக கர்வந்தன்னைநீக்கியே
காலந்தோறும்வந்தருள்வாய் கவலைதன்னைபோக்கியே

கயிலை நாதனே திருக்கமலபாதனே
கவிவாணர்கள்புகழ்காமாக்ஷி புவிமீதினில்தினமேதொழும்

---

இராகம்—பியாக்—தாளம்-சாப்பு.

## கார்த்திகாநித்யகல்யாணு என்றமெட்டு.

கண்ணிகள்.

மாதவாநந்தகோபாலா மைந்தன்முன்வந்தருள்சீலா
சீதராஇந்திரைலோலா தெரிசனம்தந்தருள்மூலா

தேவகி புத்ரசீமானே தீனர்கள் மெச்சும் புண்யோனே
ஆவலாய்வித்தமுந்தானே ஆழியில்நித்திரை செய்தோனே

வல்லவாசத்ரு சங்காராவானோர்க்கு நித்யோபகாரா
அல்லல்தீர் சுத்தபோர்வீரா அனங்கனைப்பெற்றஐய்யாரா

வந்தனம்தந்தேன்காமாக்ஷி மாசில்லாசெந்தமிழ்சாக்ஷி
சந்ததம்உந்தன்கண்காக்ஷிதந்திடி லுண்டுமோதாக்ஷி

---

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

## கல்யாணம் செய்து வையுமே என்றமெட்டு.

### பல்லவி.

சண்முகவடிவேலனே தற்காத்தருள் சீலனே
எண்டிசையோர்புகழும் கனவானே
ஏடவிழ்கடப்பமாலே யணிவோனே
முண்டசுக்கிழவனை சிறையில் வைத்தோனே
முருகவிழ்மலரடி யான்பணிந்தேனே (சண்)

கிள்ளைமொழிவள்ளிக்கேற்ற சிங்காரா
கிரவுஞ்சகிரிதனைப் பிளந்தகெம்பீரா
புள்ளிமயில்மிசை ஏறுமொய்யாரா
பொற்புமிகுந்திடும் கௌரிகுமாரா (சண்)

ஆணவமாயைகாமியம் நீக்கி
அன்புடனேகலைக்ஞான முண்டாக்கி
வீணனையனுதினம் ஆண்டருள் நோக்கி
வினைஎனும்சாகரம் தனையுமே போக்கி(சண்)

சிற்பரன்செவிதனில் மந்திரமறைந்தவா
தேவர் கோன்றனக்கு மருகனுய்வந்தவா
விற்பனன்காமாக்ஷி பாடற்குகந்தவா
விந்தைமிகும் சரவணையிற்பிறந்தவா (சண்)

---

## வெள்ளிமலை யொத்தபலமேடை என்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சுருளிமலைமீதுமேவுஞ்சீலா உனை
தோத்திரிகதேன் சுப்ரமண்யவேலா பசுந்
தோகைமயிலேறிநிதம வாகுடனே காருமெனை
துய்யா முருகையா

கண்ணியமுடனே பலநாளும் மச்சக்
காவடியுன் சந்நதியிற் சூழும் திரு
காக்ஷிதனை என்னசொல்வேன்மாக்ஷிமை மிகுந்திலங்கும்
கந்தா சிவன்மைந்தா

தீராதபிணியகற்றும் தேவே உந்தன்
சித்துதனைஎன்னசொல்வேன்கோவே முன்பு
தென்பொதிகைமுனிவனுக்கு அன்புட னுபதேசித்த
திருவே வேதக்கருவே

கணபதிதனக்கிளையதீரா சேயன்
காமாக்ஷிதமிழுக்குபகாரா இந்த
கத்துகடல் சூழுலகில் சித்தஞ்நொந்து வாடுகிறேன்
காராய் கலிதீராய்

இராகம்—நாதநாமகிரி—தாளம்-ஆதி.

## நானிருந்தென்னலாப மென்றமெட்டு.

பல்லவி.

ஜீவனே துள்ளாதே பாழும்தேகத்தைநம்பாதே

அநுபல்லவி.

ஆவலாய்நாய்நரி காகம்பருந்து
அறுசுவையுடனே புசித்திடும்விருந்து
பாவியேஇனிஉந்தன் ஐயந்தனைத்திருந்து
பரிவுடன் பேரின்ப அமிழ்தந்தனையருந்து (ஜீ)

சரணம்.

மலஜலம் கிருமிகள் வசித்திடுங்கூடு
மறலிவந்திழுக்கையில் போம்சுடுகாடு
நலமுடனதைநீயும் நம்புவதுங்கேடு
நாலாம்பதவியை விரைவுடனேதேடு (ஜீ)

மாயப்பிரபஞ்ச மயக்கந்தனைத்தள்ளு
மாதுமையடியார்கள் நேசந்தனைக்கொள்ளு
சேயன்காமாக்ஷிசொல் செந்தமிழைவிள்ளு
ஜெகந்தனிலேநீயும் குடித்திடாதேகள்ளு (ஜீ)

---

## பஞ்சனைமீது பழகா யென்றமெட்டு.

இராகம்—காபி—தாளம்—சாப்பு.

பல்லவி.

தொந்தரவான உடலம்நாளும்
துற்கந்தம்வீசுமனுக்குள்ள சடலம்(தொ)

அநுபல்லவி.

விந்தையுடன் தினமே நானும்
விள்ளுவதைக்கேளு அன்புடன்மனமே (தொ)

சரணம்.

தூங்கையிலே நீயும் விடுகின்றமூச்சு
சுழிமாறிமேல்நோக்கி போனாலும்போச்சு
பாங்கானசுடுகாடே நிலவரமாச்சு
பக்தன்காமாக்ஷிசொல் நிசமானபேச்சு
பாசந்தனைமாற்றுவாய்தூயபாதிமதிசூடுமீசனைபோற்றுவாய்

ஆபாசமுள்ள புழுமலமூத்ரம்
ஆறுபோல்பெருகியே நிறைந்திடும்பாத்ரம்
கோபாவேஷம்வேண்டாமிது ஒருசூஸ்த்ரம்
குமரனையனுதினம் செய்குவாய்தோத்ரம்
குடும்பவாழ்வுசதமா நானும்கூறியசங்கீதசாரமுமிதமா(தொ

---

## அருள்கடலென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

திருக்கழல் போற்றினேன் ஞானலோசனி
வந்தருள்வாய் சிங்கார முள்ளசிம்மாசனி
தேவிமனோன்மணி திவ்யசிரோன்மணி
தீதிலாத நாகபூஷணி
திகழ்சீதரன்றங்கையே சேல்விழிமங்கையே
சீர்பாதம்தாராயோ நாராயணி
சிவியே நீலியே சூலியே தேவர்க்கனுகூலியே (தி

மகிடசம்வர்த்தனி மாசில்லாநர்த்தனி
மாகாளத்திசர் பத்தினி
மலைமன்னன்புதல்வியே மரகத செல்வியே
மாகாளைமீதேறி நீசேவைதா
மாதவர்தாள்தொழும்நாரியே மகிமைமிகும்வீரியே (தி)

சங்கரிசாம்பவி சாமுண்டிபைரவி
சாற்றினேன் காமாக்ஷி நற்கவி
நல்லசற்குணவல்லியே சௌந்தரமெல்லியே
சாலோக சாமீப சாரூபமும்
தந்தருள்வாயேதாக்ஷாயணிதரணிபுகழும்காத்தியாயணி (தி)

---

## ராமபஜனகோதியா என்றமெட்டு.

இராகம்-தேசீகஜங்கம்தோடிகாபி—தாளம்-சாப்பு

### பல்லவி.

கருடனேறிவருவாய் கண்ணபிரானே (கரு

### அநுபல்லவி.

திருமகள்நேயனே தேவகிசேயனே
செய்யகனிவாயனே கண்ணபிரானே (கரு

### சரணம்.

ஜீவகாருண்யனே ஜெகம்புகழ்கண்யனே
திவ்யரூபலாவண்யனே கண்ணபிரானே(கரு)

பக்தர்தயாளனே பற்குணன்தோழனே
பங்கயமலர்த்தாளனே கண்ணபிரானே(கரு)

காஞ்சியில்வாழ்பவா கருத்தினில்சூழ்பவா
காமாக்ஷிதனையாழ்பவா கண்ணபிரானே (கரு)

---

## இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்.

## விகசிதபுஷ்பவிசால மென்றமெட்டு.

### கண்ணிகள்.

பகவதிநித்ய கல்யாணிசூலி
பகடுதனைப்பலி வாங்கும்நீலி
உந்தன் பதமலரடியினை யனுதினமுதவியே
பதிதனிலெனை நிதம்கார்கபாலி

மகரிஷிசித்தர் வணங்கும்நாரி
மதியணிருத்திரன் கொஞ்சும்பாரி
கருமகிடமுகமுடைய அசுரனுயிரதனை
மறலியுலகுதனில் சேர்த்தவீரி

சுடலையில்நர்த்தனம் செய்யும்குமரி
சுருதிமதித்திடும் திவ்யசமரி
நல்லசுபமெனும்வரமருள் தடமிகுமலகைவெண்
துவசமும்கரமதி லேந்தும் அமரி

படிபுகழ்விற்பன ஞங்காமாக்ஷி
பதமுமுரைக்கிறேன் கேள்கடாக்ஷி
துய்யபடவரவணிந்திடும் அழகியவிமலையே
பரிவுடன்தினசரி மெய்வாய்சாக்ஷி

---

இராகம்-வராளி-தாளம்-சாப்பு.

பாலைவனந்தனிலே என்றமெட்டு.

கண்ணிகள்.

சாமியுபேந்திரனே துளபத் தாரணிந்தவனே
உந்தன்தாள்பணிந்தனன் சேவைதந்துமேயாளு
மெந்தனை நீயும் சந்ததம்

பூமியளந்தவனேசுகபோக சௌந்தரனே
முன்புபோர்புரிந்துமே பாவிகம்சனை ஓர்க்ஷணந்
தனிலே பிளந்தவா

தூதுப்கர்ந்தவனேநெடிய தூணில்வந்தவனே
திகழ்தூயகிண்கிணி ஓசைதங்கியதோகை
இந்திரை ஆசைநண்பனே

பாதுகைதந்தவனே திவ்யபாலசுந்தரனே
நாளும்பாலன்காமாக்ஷி தாசன்கூறிடும்
பாடல்தோறுமே கேளுமாவலாய்

---

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

மாத்தாடபாரதேனுஎன்றமெட்டு.

பின்மகுடம்.

பல்லவி.

ஆண்டருளாஞ்சநேயா அஞ்சனைசேயா

அநுபல்லவி.

தூண்டிவாய்மீனதுபோல் சோருதேமனம்தூயா

சரணம்.

ஆழிதனையுந்தாண்டி அரக்கிதனையுந்தீண்டி
தாழ்மையாய்த்திருவாளிதந்தாய் சீதையைவேண்டி

ஜகமிசையுனது மகிமைதனைநிதம்
பகருவதும்வெகு எளிதில்முடியுமோ

தாதுமண்டிடும்சீதபங்கயபாதந்தந்துமேபூதலந்தனில் (ஆ)

எல்லோரும்போற்றுந்தீரா இலங்கைஎரித்தவீரா
வல்லமையுள்ளசூரா வாயுசெல்வக்குமாரா

வடிவழகுடைய விசயன்ரதந்தனில்
குடியுமிருந்தமர் ஜெயமும்புரிந்தவா
வம்பணிந்திடும் கொங்கையர்களின்

துன்பந்தன்னிலென் சிந்தைநொந்ததே (ஆ)

சாமளவண்ணன்றூதா சற்குணமுள்ளநீதா
காமாக்ஷிபோற்றும் பாதா கருணைமிகுந்தபோதா

கனவுதனிலுனதடியிணை தனையுமனது
மகிழுடன்றுதியும் புரிகிறேன்
காலன்வந்தனு காமலென்னையும்

ஞாலந்தன்னிலே நாளும்வந்திமே (ஆ)

## இராகம்-காபி-தாளம்-ஆதி.

## கலிலெலா என்றமெட்டு.

### பல்லவி.

பழனுபுரிதனிலெழுந் தருளிய பகவனே
உனைத்துதித்தேன் கரங்குவித்தேன் (பழனு)

### அநுபல்லவி.

மழுமான்றனைக்கரந்தனி லணிந்திடும்
மவுனதற்பரன்மகனே அறுமுகனே (பழனு)

### சரணம்.

அமராபதிஇறையவனருளிய அரிவையைமணந்தவனே
நல்லஅழகார்ந்திடும் குறமகள்தனை
முனம்அடவியிற் புணர்ந்தவனே
தமியேன்குறைதனை யொழித்தருளுவாய்
தனயன்காமாக்ஷி தினமேதொழுந்தனமே (ப)

---

## இராகம்-சஹானு-தாளம்-சாப்பு.

## ஐயாபழனிமலைவேலா என்றமெட்டு.

### கண்ணிகள்.

தென்பரங்கிரியில்வாழும்வேலா உந்தன்
தெரிசனந்தந்தருள்வாய் சீலா
[illegible] மலை
[illegible]

புள்ளிமயிலேறிவரும் வாகாநல்ல
புன்சிரிப்புடைய பிரபுடீகா
வள்ளிதனையணைந்திடு மோகா அதி
வடிவழகுள்ள வச்ரதேகா

பாசபந்தம்தன்னையுமே நீக்கிஉந்தன்
பக்தரிலெனை யொருவனுக்கி
நேசமுடனுள்வாயென்னை நோக்கி அந்த
நெடியபவங்களையும் போக்கி

பாவலன்காமாக்ஷிதொழும் பாதாதிவ்ய
பன்னிருகரமுள்ள விநோதா
காவடியார்போற்றும் கந்தாதாமூல
கயமுகனுக்கிளைய நீதா

---

## உனக்கோமனமில்லை என்றமெட்டு.

### இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

முருகாஉனக்குளன்ன பெருமைவந்ததுகூறும்
முகுந்தன்மருகா நீரும்

அநுபல்லவி.

திருநெல்விளந்துவெகு சிங்காரமுடன்சூழும்
தென்பழனபுரியில்சிந்தை மகிழ்ந்துவாழும் (மு)

சரணம்.

தங்கையோகொலைகாரன் தாயாரோமலைநீலி
தமையனேவந்தமில்லா தாளிவயிறுடையோன்

மந்தஹாசமுடையமாமனே சித்துக்கள்ளன்
மாலையுனக்குயிட்டமனைவி குறவள்ளிமான்

கலையோகாவிவஸ்திரம் தலையோமுழுதுமொட்டை
கழுத்திலணியும்பணியோகரிய உத்ராட்சமாலை

மலையோவசிக்குமில்லம் மடுவோஜெனித்தஇடம்
மடவார்தனையுங்கண்டுமையல் கொள்வதேவேலை

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

## பகாரியாலாஎன்றஇந்துஸ்தான் மெட்டு.

கண்ணிகள்.

கபாலிபாலாஎனைக் கார்வடிவேலா
கானகத்தில்தேனுமாவும் தானுண்டசீலா அந்த
கச்சணிந்தகொங்கைவள்ளி மகிழும்லோலா
கற்றோர்க் கனுகூலா

விநோதவீரா நல்ல வெற்றிமயூரா
விந்தையுள்ளசெந்தில்மேவும் கந்தகுமரா
சதுர்வேதனைச்சிறையி லிட்டசூரதீரா
விண்ணோர்க் குபகாரா

அனாதிநாதனே என்னை ஆள்வாய்சீமானே
ஆதியானஐங்கரர்க்கு நேரிளையோனே
பகைஅசுரரைக்கருவறுத்த புண்யவானே
ஆறுமுகத் தோனே

அசோகுபுன்னை முல்லை ஆம்பல்கொன்னை
ஆவலுடன் தூவினானும் சேவித்தேனுன்னை
நாளும்அன்புடனே ஆண்டருள்காமாக்ஷிதன்னை
ஆதரிப்பா யென்னை (கபாலி)

---

## காணக்கிடையாததங்கமென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பன்னிருகை வடிவேலா
என்னிருதோள்மீதிருந்து உன்னிருபதமளிப்பாய் (ப)

விமலிகுமாரா வெற்றிமயூரா
வீரா கெம்பீரா ஒய்யாரா சிங்காரா (ப)

வள்ளிசிநேகா வடிவுள்ளதேகா
வாகா விவேகா வைபோகா சையோகா (ப)

தனயன்காமாக்ஷி தனக்குநற்காக்ஷி
தாரும்கண்பாரும் தற்காரும் முன்வாரும் (ப)

---

## பூலோகமாய்கையிலே என்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அம்பாள்காமாக்ஷிதாயே உன்பாதம்மீய்வாயே
ஆங்காரிநீலி ஓங்காரிசூலி

அருமறைப்பொருளே திருவரமெனக்கருளே
ஆவலோடுதேகமீது ஆடும்நாகபாம்புசூடும் (அ)

ஜெகமாய்கையால்மெலிந்து அகம்வாடுதேனொந்து
சிறியேன்முன்வந்து திருநீறுதந்து

திருவருள்புரிவாய்வெகு விரைவுடன்பரிவாய்
தீதில்லாவேகாம்பரேசர் காதலோடுநாளும்சேரும் (அ)

பரவாணன்காமாக்ஷி பாமாலைகேளாச்சி
பணிந்தேனுன்பாதம் பகர்ந்தேன்சங்கீதம்

பதிபுகழ்திருவேகல்ல கெதிதருமருவே
பச்சைவர்ணமுள்ள துய்ய அச்சுதன்னுடன்பிறந்த (அ)

---

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

## கார்ப்பது உன்கடமை என்றமெட்டு

## கண்ணிகள்.

ஸ்ரீரங்கநாயகனே போற்றினேன்
சிந்தாகுலமொழித்து வந்தாளும்தாயகனே (ஸ்ரீ)

பாரெங்கும்புகழும் தீனதயாளா
பக்ஷம்வைத்தருள்வா யேழைபங்காளா

பரிமளம்வீசும்தோளா போற்றினேன்
சிந்தாகுலமொழித்து வந்தாளும் தாயகனே (ஸ்ரீ)

கன்றெறிந்து விளங் கனியுதிர்த்தோனே
காமாக்ஷிதாசனை காக்கும்சீமானே

காயாம்புமேனியோனே போற்றினேன்சிந்தா
குலமொழித்து வந்தாளும் தாயகனே(ஸ்ரீ)

---

## பாலாபிஷேகப் பழனிமலையப்பனென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

பல்லவி.

தேனபிசேகத்திருச் செந்தூர்வேலவன்
தீபதெரிசனம் க்ஷேமலாபம்

அநுபல்லவி.

ஞானமிர்தக்கட லாறுமுகனடி
நம்பியிருந்தாலே தீரும்பாவம் (தேன)

தொகையரா.

சரசசல்லாபமதன சிங்கார ரூபன்
பிரஜையெல்லோரும் பஜனைகொண்டாடும்தீபன்

சதுர்மறைமுடிவினில் நடமிடும்யோகன்
பதிபுகழ்குறமகள் மருவியதேகன்

தார்தரித்தபுயசூர பத்மன்றனை
ஓர்க்ஷணத்தினிலே வேரறுத்தோன்(தே)

தொகையரா.

அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகன்
இகபரசாதனம்தினசரி யீய்ந்திடும்தாயகன்

அயில்விழியுமையவ ளருளியசேயன்
மயில்மிசையமர்ந்திடும் அழகியதூயன்

அன்பன்காமாக்ஷிசொல்பண் பதசாஹித்யம்
இன்பமாய்க்கேட்டிடும் நண்புடையோன் (தே)

---

## வேலா நீகெதியேஎன்றமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்

பல்லவி.

காரும் வேலவனே
கானமயிலேறி யெனைக் (காரும்)

அநுபல்லவி.

ஞாருலகில்நானும்நொந்து பரதவிக்கிறேன்மெலிந்து
வேறுதவியாருமில்லை வேளைதவறுமல்வந்து (கா)

சரணம்.

சற்றேனுமடியேன்மீது தயவுனக்கில்லையிப்போது
பெற்றதாய்தந்தையும்நீயே பேதமெண்ணலாமாபாது

எந்தன்மீதென்னவிரோதம் இதுவுமென்னபிடிவாதம்
சிந்தைநோகயின்றுஎன்ன செய்தேநானுமபராதம்

அன்னமடைகாத்துவாழும் அழகியகழனிசூழும்
நன்னகர்பாளையமேவும் நண்பன்காமாக்ஷியைநாளும் (கா)

---

## முருகன் திருமால்மருகனென்றமெட்டு.

இராகம்-அடாணா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பகவன் ஆறுமாமுகவன் மகிமை அந்த
பரமனுக்குமில்லை வரமிகத்தந்திடும் (பகவன்)

அநுபல்லவி.

இகலோகபிர சாதமளித்திடும்
எழில்கோபுரமலைமேவிய கழுகாசலமகிலேவளர்

சரணம்.

சரவணப்பொய்கையில் பிறந்து
வளர்ந்திட்ட சத்திவடிவேலன்

முன்புதந்தைக்கிப்பிரணவ மந்திரமுழுதும்
சாற்றிய குணசீலன்

அரக்கர்குலந்தனை யழித்துவந்தகாலன்
அமரர்குறைதனை தீர்த்தவனுகூலன்
மரகதமயிலேறு மாசில்லாதகோலன்

மலியஞ்சன விழிகுஞ்சரி
வெகுரஞ்சித மொழிகொஞ்சிய (பகவன்)

நேர்த்தியுடன்கானில் வேங்கைமரமாகி
நின்றசமத்காரன் வெகுநேமமாய்காமாக்ஷி

சொல்லடாணாராகம் நித்தங்கேட்குமுகாரன்
பூத்தகடப்பமாலை யணிந்ததீரன்

பொற்புடன்குன்றுதோறாடிய செம்பீரன்
க்ஷேத்திரமெங்கும்புகழ்ந்திடு மொய்யாரன்
தேடிக்கழல்பூஜித்திடில் தேகத்தினில்நோயற்றிடும்(ப)

---

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

## கழுகுமலைக்கிதோநேராயென்றமெட்டு

## கண்ணிகள்.

ஏழைமீதின்னமும்வாதா உனக்கென்ன
குறைசெய்தேன் வன்னமலர்ப்பாதா (ஏ)

இலங்கும் சிவந்தவாயனே அலங்கலணிந்ததூயனே

இருப்பிடந்தனி னுனையும்புகழ்ந்து
விருப்பமதுடன் தொழுதேன்மகிழ்ந்து (ஏ)

ஏரகமேவியவேலனே தாரணியோர் புகழ்சீலனே (ஏ)

இமயவர்பணிந்திடுமுதல்வனே உமயவளருளியபுதல்வனே

இந்தவேளை யுன்னைநாடி
வந்தேனனும் எண்ணம்வாடி (ஏ)

இனிநான்மறவேனுனையே தினமேயருள்வாயெனையே

தாழைமடல் வீசும் பாளையம் க்ஷேத்ரன்
தாராளகுணமுள்ள காராளகோத்ரன்

சங்கீதசாஹித்யம் பொங்கும்நற்பாத்ரன்
சந்ததம் சிவனைப் பணிந்திடும்தோத்ரன்

தனயன்காமாக்ஷி எழுதும்
தண்டமிழ்க்கீர்த்தனை முழுதும்

மனதினில்கேட்டு எப்பொழுதும்
மாசில்லாப்பதந் தொழுதும் (எ)

---

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

## உன்னைப்போலொருபெண்ணைகண்டதில்லை என்றவர்ணமெட்டுபின்மகுடம்.

### கண்ணிகள்.

சீதராளன்மேல் சித்தம்வைத்கருள்வாய்
நாளும்சிந்தைவருந்தி மிகுந்துமெலிந்தனன் (சீ)

ஜெகமீதினில்வளமேவிய திருவேங்கடகிரிமீதுறை(சீ)

நல்லசிற்றிடைலக்ஷ்மிநித்தமுமுத்தமளித்திடும்லக்ஷண (சீ)

சீதநறுவாடைகமழ் மாதுளபமாலைபணி (சீ)

திறமுடனெருநொடிதனில்முனம் இரணியனுடகுடலுருவிய

திகழும்அரவணைதனிலனுதினமும் துயிற்றிடும்ரவிகுல(சீத)

தேடிக்கழலிணையேதினம் சேவித்திடுமடியார்களின்
க்ஷேமத்தையு மெதிர்பார்த்திடும்(சீத)

செப்புனவப்பழித்தெதிர்த்த சித்திரத்திருத்துப்பசி
சிறுவிலைச்சி பெற்றெடுக்க(சீத)

சாதுசற்ஜனர்கள் நேசன்
தந்தைதாய் குருவிஸ்வாசன்

பூதலம் புகழுல்லாசன்
பொறுமைசேர் காமாக்ஷிதாசன்

புகலும்பத சாஹித்யம்
மகிழும்படிகேள் நித்யம்

அகிலந்தனி லகத்யம்
அடியேன்மறவேன் சத்யம் (சீ)

---

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

பரமானந்தமெய்ப்பரங்குன்ற மென்றமெட்டு.

பல்லவி.

அடியேன்கவலைதீர் முகுந்தா
அசோதை மைந்தா(அடியேன்)

அநுபல்லவி.

துடியிடைமாதர்கள் மையலில்நொந்து
சோர்ந்துநான்வாடுறேன் தேகமெலிந்து
தடமிகுங்கருடன் மீதேறியேவந்து
சாரூபசாயுச்ய பதவியும்தந்து (அ)

சரணம்.

அலைவாரிதனிற்றுயின்றோனே பூபாரந்தீர்க்க
அவதாரஞ்செய்தபுண்யவானே விந்தையுடனே

நிலமேயளந்தபெருமானே அனுதினமும்
நெடுமாமறைபுகழ்மாயோனே உனையேநானும்

நித்தம்துதித்தேன்மதித்தேன் களித்தேனெய்யாரா
கருணைகூர்ந்து

முத்தியளித்தேசுகத்தே கொடுப்பாய்கெம்பீரா
ஜனகன்வில்லை

யுத்தியெடுத்தேவளைத்தே யொடித்தாய்சிங்காரா
காளிங்கன்வாலை

பற்றிஇழுத்தேமிதித்தே நடித்தாயுதாரா
சுக்ரீபன்காண

அஸ்திரம்விடுத்துமேமரத்தையும் துளைத்தரெகுராமா
மிதுலாபுரி

உத்தமிகளித்துமிகமுத்தமு மளித்திடுநேற்பூமா
விசையனுக்கு

சித்திரரதத்தையும்நடத்தியுமே வைத்தபரந்தாமா
உந்திதனிலே

இத்தலம்படைத்ததொருகர்த்தனையும் பெற்றதிருநேமா
அபயமென்ற

அத்தியினபத்தை நீக்கியநாதா
அலகைமுலைப்பா லருந்தியநீதா

நித்தமுங்காமாக்ஷி போற்றிடும்பாதா
நேமிதனைக்கையிலேந்தும் விநோதா (அடி)

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

## தேவாதிதேவாஜெயவல்லவா என்றமெட்டு.

### கண்ணிகள்.

திருப்பரங்குன்றி லமர்ந்தவனே
சேனைவீரனாக வந்தவனே
விருப்பமுடன் தாரணிந்தவனே
வேழமடந்தைக் குகந்தவனே
கோலமயிலேறும் கொற்றவனே
கோதிலாதகலை கற்றவனே
நீலவளையலும் விற்றவனே
நீனிலம்புகழும் நற்றவனே
மதுவும்தினைமாவு முண்டயவனே
மாமலைவேரறக் கண்டவனே
கதிர்வேல்தனைக்கையில் கொண்டவனே
கர்த்தனுக்குபதேசம் விண்டவனே
காமாக்ஷிதாசனைக் கார்ப்பவனே
கர்மவினைகளைத் தீர்ப்பவனே
சாமீபபதவியிற் சேர்ப்பவனே
சற்சனர்களைக்கண் பார்ப்பவனே

---

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

## கூத்தாடிமகனே என்றமெட்டு.

### பல்லவி.

சாலாக்ஷிமகனே சற்காருங்குகனேவிசா

அநுபல்லவி.

கோலாகல முள்ளோனே குறத்திமகிழ்சீமானே
வேலாஉனையும்நானே வேண்டித்துதிசெய்தேனே (சா)

நீளேரைக்கார்க்கும்புண்யா திவ்யரூபலாவண்யா
சேவித்தேன்சுப்ரமண்யா தீதில்லாதகாருண்யா (சா)

தொகையரா.

தேவர்சோகமாறியோட சேனைவீரனாகவந்ததீரா
ஆவலோடுகோனிலேகி ஆசைதீரமாவுமுண்டவீரா

காமாக்ஷிபோற்றும்நாதா கானமயில்விநோதா
பூமிபுகழுமநீதா பூத்ததாமரைப்பாதா (சாலா)

---

இராகம்-சாவேரி-தாளம்-ரூபகம்.

## தாரகமுனையன்றி வேறில்லை என்றமெட்டு.

பல்லவி.

பார்தனிலுனையன்றி யார்துணைமுருகையா
பாலனுக்கருள்புரி மெய்யா

அநுபல்லவி.

நீர்வளமேவிய ஏரகமீதுறை
கிருபாஉனையே தொழுதேன்தினமே
தருவாய்வரமே ஒயிலாய்மிகவே(பார்தனி)

சரணம்.

உலையினில்விளங்கியமெழுகது போலெப்போதும்
உருகியே வாடுகின்றேனனே

உனதுமனமகிழ்ந்து உதவிபுரிந்திடுவாய்
உம்பர்கோனசை மருகோனே

மலையைப்பிளந்ததிரு மரகதவேலனே
மாதரிருவர்களை மருவியசீலனே

மயில்மீதழகாயேறும் உல்லாசா
மலரடிபோற்றும் காமாக்ஷிதன்னேசா

மாசிலாதசிவனுக் குபதேசா
மாதவமுனிவர்கள் போற்றும்சர்வேசா (பா)

---

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

என்னகேள்விமுறைஎன்றமெட்டு.

பல்லவி.

கேட்கவில்லையாகேசவா உந்தனிருசெவிதனிலே (கே)

அநுபல்லவி.

ஷோக்குமேவியதூக்கு மதுரவாக்குஇன்னமும் (கே)

சரணம்.

தேசந்தனில்மாதராசை யெனுங்கொடும்பாச
வலைதனில்யோசியாமல் சிக்கி

சித்தம்வாடியேநித்தம் முறையிடும்சத்தம்இன்னமும்(கே)

மேதினியோர்புகழ்நீதன்காமாக்ஷியும் சாதுவாய்
நாளும்பிரீதியாய் கொண்டாடும்மேளம்
ரூபகதாளம்பிலஹரிராகம் இன்னமும்(கே)

---

இராகம்-வராளி-தாளம்-சாப்பு.

அற்புதபூதமலையென்றமெட்டு.

கண்ணிகள்.

சங்குமுழங்கிடுமெங்கள்பரங்கிரி சாமிவேலா
நீயும்சந்ததமெந்தனை வந்தருள் சுந்தரமேவுஞ்சீலா

துங்கசதங்கை இலங்குமலங்கிர்த சூரதீரா
நாளும்தொண்டருமண்டருங்கொண்டு வணங்கிடுஜீவர்தாரா

அத்தியுரித்தவர்பெற்று வளர்த்தருளருமைச்சேயா
அந்தஅச்சுதன்மெச்சிடுமற்புத லக்ஷணமுள்ளதூயா

முத்தமிழ்வித்தைகளித்து உரைத்திடுமோகாமாக்ஷி
கவிமுற்றுமுரைக்கிறேனித்தருணத்தினி லீய்வாய்காக்ஷி

முப்புரிநூலணி தோளா
எழில்முண்டகமாமலர்த் தாளா
அதிநட்புமிகுங் குணவாளா

உனைநம்பினேன்உனைநம்பினேன் நம்பினேனனுதினம்
அனுதினம் அனுதினம் (சங்கு)

---

இராகம்-ஆபேஹி-தாளம்-சாப்பு.

## ஸ்ரீராமச்சீதா என்றமெட்டு.

பல்லவி

ஸ்ரீராப்திநாதா சிதேவிசமேதா சுந்தர ஸ்ரீ

அநுபல்லவி.

பாரோர்போற்றும்நீதாபணீந்தேனிதோபாதுகார்விநோதா
தசரதசுதாதாரணியும் சங்குசக்ராயுதா
கஜேந்திரானுகூலா காமாக்ஷியையாண்டருளும்சீலா (ஸ்ரீ)

---

இராகம்-சுத்தபங்காளம்-தாளம்-ஆதி.

## தொலினே சேஜின என்றமெட்டு.

பல்லவி.

ஆரூர்மகனே அறுமாமுகனே
ஆடுமயிலேறும் அழகியகுகனே

அநுபல்லவி.

சிரமீதிருந்து தெரிசனம்தருவாய்
ஜெகமேபுகழும் தீனரக்ஷகனே (ஆ)

சரணம்.

இமையோர்தனக்கு இடரேயளித்த
இகலசுரர்களைஎமபுரம் சேர்த்தோனே
அமராபதியை அரசுபுரிந்திடும்
ஆயிரங்கண்ணனின் அருமைமருகோனே (ஆ)

ஜெனகாதிகள் தினமேபுகழும்
தென்பழனிவாழும் சேவற்கொடியோனே
என்னையாள்பவனே ஈராறுகரனே
எந்நாளுங்காமாக்ஷி ஏற்றுங்கனவானே (அ)

---

## நெனருசிநானு என்றமெட்டு.

இராகம்-மாளவி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலசுப்ரமண்யாபாதுகாராய்பாரோர் புகழ்ஜீவகாருண்யா

அநுபல்லவி.

ஆலந்தனையுண்ட ஆதிசிவனார் பரிவுடனளித்தபுண்யா (பா)

சரணம்.

உனையேநம்பினேனேநிதமும் உண்மையுடன்மனதில்
இனியாவதென்மீது இறக்கம்வைத்துநீ
அன்புடன் ஈய்வாய்பதமும்(பா)

வருவாய்வல்வினையும்ஒழிப்பாய் வன்னமயிலேறியே
திருவாய்மலர்ந்துநீசேயன் காமாக்ஷி
தனக்குமே சேவையளிப்பாய்(பா)

---

இராகம்-தேசிகதோடி—தாளம்-சாப்பு.

பியாரேசோபன்மாலுங்கா என்றமெட்டு.

கண்ணிகள்.

சத்திவடிவேலனே தற்காரும் சீலனே — சத்தி

அத்திதனையுரித்த அமலன்குமாரனே
வெற்றிமயிலேறும் வீராதிவீரனே — சத்தி

அருணகிரிக்கிமுன் அன்புடன்வந்தவா
சரவணப்பொய்கைதனிலேபிறந்தவா — சத்தி

செந்நெல்விளைந்திடும் திருப்பரங்குன்றூரா
கன்னல்மொழிவள்ளிகாதல்கேற்றதீரா — சத்தி

சந்ததங்காமாக்ஷிதாசன்றொழும்தூயா
வந்தவினை தீர்க்கும்வாகுள்ளகாங்கேயா — சத்தி

---

செந்தாழம்பூ என்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சிந்தாவந்தேஉந்தாளீய்வாய் கயமுகவனுக்கிளையவா
பைந்தாரணியும்வேலா பைரவிதந்தபாலா
பகையாக்கரின்குலமனத்தையும்ஒருதினத்தில்கருவறுத்தவா
அய்யாமெய்யாதுய்யாஎன்னை ஆதரித்தருள்புரிகுவாய்
வையாபுரிமுருகா வாமனன்றன்மருகா

வளையல்விற்றுமே தினைவனத்தினி
லெழில்குறத்தியை மணமுடித்தவா(கந்தா)

தெம்பாயம்பால்கொம்பானையை சினந்தளய்தவன்சேயனே
அன்போடெந்தனை நாளும் ஆசீர்வதித்தேயாளும்
ஆறுமாமுகநாதனேஉனைஆறுகாலமும்கூறினேன்றுதி (க)

உற்றார்பெற்றார்மற்றாருமே உதவிஎந்தனுக்கில்லையே
கற்றோர்பணியும்வீரா காமாக்ஷிக்குபகாரா
கானமாமயில்மீதிலேறியே வேளைதோறுமேநீயுமாதரி (க)

---

இராகம்-பியாக்-தாளம்—சாப்பு.

பனக்கரச்சினத்திபெற்ற என்றமெட்டு

கண்ணிகள்.

அரக்கரைச்சமர்க்களத்தி லதம்புரிந்தவேலனே
இரக்கம்வைத்துஇக்ஷணத்தி லென்னைக்காரும்சீலனே

எற்றினேனுனைநாளுமே சாற்றினேன்பதங்கேளுமே
எந்தன்மீதினில்சிந்தை கொஞ்சமும்

உந்தனுக்குமேசந்ததமு மில்லைதானே
தினைப்புனக்குறத்திமெச்சும் தீதில்லாவைபோகனே

உனைத்துதித்துதித்துதித்தம் உருகுகின்றேன்யோகனே
உமையவள்திருமைந்தனே இமையவர்புகழ்கந்தனே

உன்னதமயில் தன்னிலேறியே
நன்னயமுடன்என்னையுமே ரக்ஷிப்பாயே

குரும்பைதன்னைவென்றகொங்கை குஞ்சரிமணாளனே
விரும்பியுன்னைநம்புகின்றேன்மேரு நிகர்தோளனே

விண்டுவின்திருமருகனேகுன்றினில் வளர்முருகனே
வித்தைதங்கியமைந்தன்காமாக்ஷி செந்தமிழ்க்கருள்

தந்தருளும் புண்யவானே

---

இராகம்-ஆரபி-தாளம்-சாப்பு.

## கொஞ்சுங்கிளிமொழிஎன்றமெட்டு.

## கண்ணிகள்.

நீலகண்டதிரி நேத்திரதாரியே
நீனிலம்புகழும் நேசோபகாரியே

காலனையுதைத்த கருணைசேர்வாரியே
காரெனையனுதினம் தேருதல்கூறியே (நீல)

பிருதிவியப்புதேயு பிராணவாயுவெளி
பின்னமுமில்லாதபெருமை சேர்சுடரொளி

நிரந்தரவஸ்துவும் நீயேவரமளி
நேர்த்தியாயுன்மீது சாற்றினேன்ஜாவளி (நீல)

பாவையுமையவள் பாகத்தமர்ந்தவா
பாவலன்காமாக்ஷி பாடற்குகந்தவா

ஆவலாய்மார்பினில் அரவம்புனைந்தவா
ஆகுவாகனனையும் வாகுடன்தந்தவா (நீல)

# விநோதபரமானந்தக்கீர்த்தனை.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

## அவதாரபுருஷனென்றமெட்டு

### பல்லவி.

நரசிம்மமூர்த்தியே நாளும்நானே
உனைத்தானே பணிந்தேனே (நர)

### அநுபல்லவி.

கருணைபுரிந்துஎன்னைக் காத்தருள்வாய் (நர)

### சரணம்.

இமையவரனைவர்க்கும்இடாது செய்துவந்த
இரணியனை வதைத்தபூமா
முன்புஇரவிதனைமறைத்து இருளசனையழைத்த
ஏதமில்லாததிருநேமா பரந்தாமா ரகுராமா (நர)

வில்லில்வல்லமையுள்ள விதுரன்மனையதனில்
விருந்தமுதுண்ட கனிவாயா
இந்தவேளைநீவந்துஎந்தன் வினைதனை தீர்த்தருள்வாய்
வேதன்றனைப்பயிந்தமாயா செல் விநேயாசம்ாதாயா (நர)

பாரில்விசையனுக்கு சாரதியாயிருந்து
தேரைநடத்திவைத்த நாதா
உனதுபக்தன்காமாக்ஷிசொல்லும் நற்றமிழ்பகந்தனை
சித்தமகிழ்ந்துகேளும்நீதா மலர்ப்பாதாபிரக்யாதா

---

## வில்வளைத்தார்க்கேசீதையென்றமெட்டு.

இராகம்-பிலஹரி-தாளம்-சாப்பு.

### கண்ணிகள்.

சின்மயவடிவேலா நன்மையருளும்சீலா
ஜெகமெச்சிய மலையத்வஜன்
திருபுத்திரி உமைபெற்றருள் (சி)

உம்மையே நம்பினேனே
உலகேஸ்பரனொருகாதினிலுபதேசமுமருள்கூறிய (சி)

குஞ்சரிமகிழ்நேயா அஞ்சலிசெய்தேன்தூயா
குறமானுடனுறவாடிய குமரேசனே
எனையாதரி தஞ்சம்உனையல்லாது (கு)
தாரணியில்வேறுதவியாருமில்லை ஆறுமெனை (கு)

காமாக்ஷிதாசன்பாடும் பாமாலைதன்னைக்சூடும்
சந்தாஇனிவந்தாகிலு மூந்தாளினைதந்தாதரி (கா)

நாமந்தனைத் துதித்தேன்
நாலாம்பதமேலாகவேகோலாகல மோக்ஷமளிக்குவாய் (சி)

---

## இப்படிப்புலம்புவதுமேனென்றமெட்டு.

# இராகமாலிகை

(மத்யமாவதி)

தில்லைவாழும்சபாபதியே உந்தன்திருவடி
தொழுதனன் பரிவுடனிதுதகியே (தில்லை)

தொல்லைவினையொழித்து சுபமெனும்வரமளித்து
சுகமுடனெனையுமேஜகமதி லருளுவாய் (தில்லை)

---

## அவனியில்யாராகுலும் என்றமெட்டு.

(கானடா)

சிவகாமசௌந்தரி சிந்தைமகிழும்வாகா
திருநடனமாடிய சிற்பரானந்தயோகா (தி)

---

## தேவர்கள் பூமழைகொண்டு சொரிந்தாரென்ற மெட்டு.

(ஆரபி)

சிரித்துப்புரந்தனை எரித்தவிநோதா
சித்தவித்யாதரர் பணிந்திடும்பாதா
உரித்துடன்மார்க்கண்டர்க் கருளியநீதா
உன்னதபதவியுமளித்திடும் போத

---

## சற்பசயனதேகா என்றமெட்டு

(முகாரி)

சேயன்காமாக்ஷியனுதினமுங் கொண்ட
சீதமதியணியும்திவ்ய தேஜே

---

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

செந்தமிழையுலகினில் தந்துதவும்கந்தனே என்றமெட்டு.

## கண்ணிகள்.

உம்பர்கள்தினம்புகழும் தென்பழனிவாழ்முருகா
உன்பாகமீய்வாய்நாளுமே மனதிரங்கி
அன்போடு என்னையாளுமே
ஒயிலுடனனுதினமலரடி வணங்கினேன்
உமையவளுதவியஎழில் மிகுங்குமரனே
உற்றாரொருவரில்லையே அடியேன்மீது
சற்றேனுங்கிருபை வல்லையே

வம்பணியுங்கொங்கையர்கள் துன்பமெனும்சாகரத்தில்
வம்பாய்மூழ்கினேனய்யனே கரையிலேற்றி
தெம்பாய்தற்காரும் துய்யனே
வசிகரமுடனிளமதி தனையணிந்திடும்
பசுபதிசெவிதனில் பிரணவமருளிய
ாகுள்ளகார்த்திகேயனே தையல்தெய்வானை
கந்தணிக்கும் நேயனே

கவள்ளிகாதற்கேற்ற தங்கநிறமுள்ளதேகா
னுனதுபாதமே எந்நாளும்வந்து
ய்வாப் பிரசாதமே
னைவரும் கிளையுடன்மடிந்திட
தனில்சமர் தனையுமேநடத்திய
பிரபுடீகனே விநோதமயில்
ம் வாகனே

கங்கைகுலவம்சந்தனில் துங்கமுடன்வந்துதித்த
காமாக்ஷிபோற்றும்புண்யனே தமியேன்சொல்லும்
பாமாலைகேளும் கண்யனே
கதைதனைஎழுதிய கணபதிதுணைவனே
கடல்தனிலுறங்கிய கரியவன்மருகனே
காக்ஷியருள்வாய்வேலனே தொண்டர்கள்மெச்சும்
மாக்ஷிமையுள்ள சீலனே

---

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்

மன்றுளாடியவா என்றமெட்டு.

பல்லவி.

நடனமாடியவா திரு
நலமொடுபொன்னம்பலத்தில் கலகலவென்றேலமிப

அநுபல்லவி.

படவரவந்தனை மார்பிலண
பாவைசிவகாமி பாகத்த
சடையிலிளம்பிறை தன்னைப்ப
தகணகஜெம்தரிகிடதை ததிங்கணதத்தோ

நாரதர்வீணைமீட்டி
நந்தியுங்கியானமாய் மத்த
பாரோர்புகழ்ந்திடும் பன
பதஞ்சலிமுனிவருக்கன்று சிதம்பர

கருணைசேர்நந்தனர் கனவிலுதித்தவா
கழனிதனில்பயிர் நட்டுக்கொடுத்தவா
பரிவுடன்சரஹண பவனையளித்தவா
பத்திரகாளியும்நாண சித்தவித்யாதரர்காண (நட)

தில்லைமூவாயிரம்பேர் தொழும்பாதா
சேயன்காமாக்ஷியை காத்திடும்நாதா
தொல்லைவினை தீர்க்கும் துங்கமுள்ளநீதா
சுருதிமுடிவதனிலனுதினமு மிருந்தருமையுடன் (நட)

---

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

குமராகுருயென்றமெட்டு.

பல்லவி.

அரிகோ விந்தா
எனைஅன்புடன் வந்தாதரி (அரி)

அநுபல்லவி.

...டிபணிந் தேனே
...குமாரனேபூவுலகோர் புகழ்தீரனே (அ)

சரணம்.

...கானே கம்சனைவதைத்தோனே
மேய்த்தோனே

கற்றவரடிபணிசீலனே உத்தமி திருமகள்லோலனே
சந்ததமுங்காமாக்ஷி தாசன்றனக்குக்காக்ஷி
தந்திடிலேது தாக்ஷி
சசரி சரிக ரிமபத சரிகரி சநிதநி பநிதப(அ)

---

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்

## ஆருள்ளே ஆர்என்றமெட்டு.

வேல் முருகா
இந்தவேளைதனில்வந்து ஆள்வாயெனைவடி (வே)

ஆலகாலமுண்ட ஆதிசிவன்மகனே
எனையாண்டருள் சண்முகனே
கோலாகலமுடன் கும்பிட்டேன்குகனே
குறமகள்தனைவனமதுதனிலருமையதுடன்தழுவியவடி(

நம்புமடியார்க்கு நல்வரமீயும்நீத
துய்யநற்றுமறை மலர்ப்பா
உம்பர்துயர்தனை ஒழித்தபிரக்யா
ஒயிலொடுதினம்நடமிடுந்திரு மரகதமயில்மிசை

பலவின்மதுபாய்ந்துபழனம் விளையும்
உத்தமபாளையமாநகர்
புலவோரனுதினம்புகழ் காமாக்ஷ
பொறுமையதுடனனு
சொலும்கவிதனையணி

---

(விருத்தம்)

அங்கயற் கண்ணம்மைதனை மணந்த லிங்கம்
ஆலவாய்க்ஷேத்திரத்தி லமர்ந்த லிங்கம்
செங்கைதனில் மான்மழுவு மேந்தும் லிங்கம்
திருநடனம் விந்தையுடன் செய்த லிங்கம்
சங்கத்தார் கலகமதுந் தீர்த்த லிங்கம்
தருமிக்கிப் பொற்கிழியுந்தந்த லிங்கம்
துங்கமிகும் வைகைதனை யடைத்த லிங்கம்
சொக்கலிங்க மென்றவர்க்கு சொற்கந்தானே

---

லைவீசி மீன்தனையும் பிடித்த லிங்கம்
வாணிச்சி துயர்கேட்டு வந்த லிங்கம்
மதியா மாணிக்கம் விற்ற லிங்கம்
விறகுதனையுஞ் சுமந்த வேத லிங்கம்
ருங்க வன்னி மரமான லிங்கம்
லுக்ர பாண்டியனை ஈன்ற லிங்கம்
 பவந்தனையும் தீர்க்கும் லிங்கம்
லிங்க மென்றவர்க்கு சொற்கந்தானே

---

## விருத்தம்.

ஸ்ரீரங்கபதியானை தேவர்துயர்தீர்த்தானை தீதில்லானை
சாரங்கக்கரத்தானை தரணிதனையளந்தானை தம்பிரானை
காரங்கநிறத்தானை கன்றுதனைமேய்த்தானை கண்யவானை [சே
பாரெங்கும்புகழ்வானை பாண்டவரைக்காத்தானைப்பணிவாய்நெஞ்

---

அலைகடலிற்றுயின்றானை அங்கஜனையீன்றானை அழகுள்ளானை
மலைதனையும்பிடித்தானை மச்சவடிவெடுத்தானை மாசில்லானை
சிலைவடிவைமறைத்தானை க்ஷேமவரந்தருவானை திகிரியானை [சே
பலைபத்ரர்க்கிளையானை பாண்டவரைக்காத்தானைப்பணிவாய்நெ

---

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

### ஆரிடம்சொல்லிநானுறுவே னென்றபெ

பல்லவி.

ராமலிங்கமே எனைரக்ஷித்தருள்வாய் தங்

அநுபல்லவி.

சோமனைச்சிரசில் சூடும்சி
சுந்தரராகவன்றுதித்த பொற்
பரிசுத்தமுள்ள நற்

## ...தபரமானந்தக்கீர்த்தனை.

சரணம்.

பர்வதாவர்த்தனி பாகத்தமர்ந்தவா
பன்னிருகையனே பாங்குடன்தந்தவா

சர்வதயாபர சத்ருசங்காரனே
தன்மையுடனிகபரசாதன மீயும்வீரனே (ரா)

கர்மவினைகளைக் களைந்திடும்புண்யனே
காமாட்சிதாசனைக் காத்திடுங்கண்யனே

நிர்மலநிஷ்கள நிரந்தர முள்ளோனே
நித்தமுங்கடல்நடுவில்கேர்த்தியாய்வாழுஞ்சீமானே(ரா

---

## பியார்மோகன்யா என்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

...நாதா கமலமலர்ப்பாதா
...ம்கீதா விநோதா (க)

...கேயா வரமருளுந்தூயா
...ய்சேயா காங்கேயா (க)

...ரா கானமயில்வீரா
... செந்தூரா (க)

...றேகா பழுதில்லாவைபோகா
...ா விசாகா (க

பார்புகழ்பாளைய மாநகர் மேவியபாவலன்
காமாட்சிதாசனும் தாள்தொழும்(கந்த)

---

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

## இந்தஉடம்பைநம்பிஎன்றமெட்டு.

கண்ணிகள்.

வேணியிற்பிறைசூடும் விஸ்வநாதா
பாணியில்மான்மழு பூணும்நீதா(வே

தையல்விசாலாட்சி தழுவும்வாகா
வையம்புகழ்காசி வாழும்யோகா(

மாலயன்போற்றிடு மாதவ
தாலம்புகழுஞ்சதா சிவ

சத்துசித்தானந்த சாகர
பத்தன்காமாட்சிபணி ப

---

சிதம்பரதெரிசனமா என்றமெ

இராகம்-முகாரி-தாளம்-ஆதி

பல்லவி.

கார்த்திகைதெரிசனமே கண்டு...செய்

அநுபல்லவி.

பூத்தமலரணியும் பூவையுண்ணுமுலை
நேர்த்தியுடன்வசிக்கும் நெடியவண்ணாமலை(கா)

சரணம்.

சுரர்முனிவர்கள்சித்தர் துதிபுரிந்துகளிக்கும்
அறம்பொருளின்பம்வீடு அன்புடனளிக்கும்

துங்கமுடனேநாளும் தோத்திரக்கவிபாடும்
கங்கைகுலத்துதித்த காமாட்சிகொண்டாடும்(கா)

---

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

ரி மாதம் திருவா திரைநா ளென்றமெட்டு.

கண்ணிகள்.

ம் கமழ்ந்து ஜொலித்திடும் கழுகுமலைக்குகனே
ரண்டும்போற்றினே னுளுவாய்

சண்முகனே
ல காட்சியாய் விளங்கும் கடவுளும்நீயல்லவா

உலகினில் வேறுதெய்வம்
டோ வல்லவா

ரக்ஷசாதனமளிக்கும் தாமோதரன்மருகா
ிரதிதினம்வந்துபிரசன்னமாவாய்முருகா

அந்தமிகுந்திடும் இந்திரன்றனக்கு ஐந்தருவளித்தோனே
மைந்தன்காமாட்சி மனோவாக்குகாயங்களால்
மலரடிதொழுங் கோனே

---

## சூரகுலசம்மாராஎன்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வேலுமயிலுந் துணே
வினையேது நமக்ினிகிே
விரும்பியேபணிகுவாய் கழலிணே

அநுபல்லவி.

விரிகதிர்மணிதனையனுதினம் கொழி
திரைகடலருகினிலொயிலுடன் வசித்

சரணம்.

விமரிசையுடனருந் தமிழ
விற்பனன்காமாட்சி எப்போதுங்கொன்

---

இராகம்-காபி-தாளம்-சாப்பு

பானுதோரேகொய்யா என்

பல்லவி.

நீலமேகவண்ணாசல்லநேர்த்தியுள்ள

அநுபல்லவி.

ஆலிலைமேற்றுயின்றோனேமுன்பு ஆனையக்காத்தசீமானே
நாளும்அண்டர் தொழுங்கனவானே (நீல

சரணம்.

ழுவகைத்தோற்றமும்நீயேஉனை ஏற்றினேனுதரிப்பாயே
ங்கள் இறையவன் தசரதர்சேயே (நீல

லவினைகளும்நீக்கிநல்லதத்துவ ஞானமுண்டாக்கி
ாத்தற்காத்தாளுவாய் நோக்கி (நீல

## தொகையறு.

ாந்தவா அனுதாக்ஷகா அன்பர்தயாளா
ீமோசனுபரப்பிர்ம்சொரூபா பங்கயதாளா
ீமேவியகாமாட்சிதாசனை யாண்டிடும் (நீல

---

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

## மகமாயிபைரவிஎன்றமெட்டு.

பல்லவி

யாரணி மாகாளிவந்து
கருளுவாய் வேதாளி

அநுபல்லவி.

லியே கோதில்லாமெல்லியே
டுதித்தமகமாயே நானும்
னைத் தருவாயே (சா

சரணம்.

சிற்சபைதன்னிலே சிற்பரன்முன்னிலே
திருநடனம்செய்த ஒய்யாரிஉந்தன்
சேவைதந்தாளுவாய் கெம்பீரி

சத்ருசங்காரியே சாஸ்திரவிஸ்தாரியே
தனயன்காமாட்சிதொழும் நீலியேநல்ல
சாந்தகுணமுள்ள சூலிே

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

அம்மாமதுரைமீனாக்ஷிஎன்றமெட்

கண்ணிகள்.

புள்ளிக்கலாபமயில்வேலா உனைப்போற்றி
புண்யோர்கள்புகழுமனுகூலா பூதநாதன்

வள்ளிக்கிசைந்தபுண்யவானே நல்லவடி
வானோரைரட்சித்தகெண்யோனேவளையல்சு

தந்தைக்குபதேசித்தநாதா நல்ல
தமியேனைக்கார்க்கவுங்கூடாதா தண்டாம

சிந்தைதனிலேமிகநாளும் உனைசே
சேயன்காமாட்சிகவியைக்கேளும் சிர

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பக்திசாதிக்கவிடாது என்றமெட்டு

கண்ணிகள்.

அரவமணிந்தகாளத் தீசா உந்தன்
அடியிணைபோற்றினேன் பிரகாசா

ருணைபுரிந்தென்னைக்காரும் பவநாசா கண்ணப்ப
ாயனார்க்குகாட்சிதந்த நேசா

மன்சிரசுகொய்த நாதா முன்பு
புடனாடிய விநோதா

மளித்திடுவாய்வன்னமலர்ப் பாதா வாளி
மதனைமாய்த்த பிரக்யாதா

ாலும்புகழும் யோகா புலித்
ரைக்கணிந்த வாகா

கமழும்ஞானும் பிகைபாகா நந்தி
றும் நஞ்சுண்ட வைபோகா

ளாவி நாளும் தோனும்
ாடங்கள் சூழும்

ாயம்க்ஷேத்திரத்தில் வாழும் தீனன்
ல்செந்தமிழைக் கேளும் (அ)

# வினோதபரமானந்தக்கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

## மாற்றறியாதசெழும்பசும்பொன்னேஎன்ற

### கண்ணிகள்.

ஆற்றோடுதும்பைதன்னை அணிந்திடும்
ஆனந்தத்தாண்டவம் ஆடிய

கூற்றனையுதைத்துக் கொன்றபிரக்
குழையூசலாடிடும் கொம்மைசேர்

நாற்றிசையோர்புகழ் நற்குண
நற்கீரனுக்குசூஸ்த்ரமநவின்றதற்

மாற்றலர்தங்களைமாய்த்த
மாதவமுனிவர்கள் மகிழும்

மான்மழுவேந்தியமாசில்லா
மாணிக்கம்விற்றுவந்தமணிமந்திர

கூன்பிறைசூடியகோதில்லா
குன்றைவில்லாய்வளைத்தகூருள்ள

தேன்கமழ்கொன்றைமாலைதிகழும்
சேயன்காமாட்சிநாளும்ஜெபிக்கும்

மீன்விழியம்பிகைமெச்சும்
மேதினிகொண்டாடும்மேலான

---

# விநோதபரமானந்தக்கீர்த்தனை.

இராகம்-ஆரபி-தாளம்-ரூபகம்.

மந்திரமாவது நீறு என்றமெட்டு.

---

திருடுமீசாபண்ணவர் போற்றும்சர்வேசா
மையவள்நேசா அன்பரைக் காக்குமுல்லாசா

குந்தபிரகாசா துங்கமுள்ளபவநாசா
விசுவாசாதேசம் புகழும்விசேஷா

ரில்வாழும்வீரா குமரனேயீன்றசிங்காரா
னிலாடும்தீரா மாசிலாதபுலியூரா

னந்தும்ஒய்யாரா காமாட்சிபோற்றுமுதாரா
தகுபேரா நந்தியிலேறுங்கெம்பீரா

---

ம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு

சறித்தகுழலாரென்றமெட்டு.

கண்ணிகள்.

ஜெகத்திலுனையே ஜெபித்தேகிதம்நானே
யேன்பருத்தபுய மீதிருப்பாய்முருகோனே

றிக்குமடவார் மயக்கமொழிப்பாயே
ன் கவிக்கமயிலே நடத்திவருவாயே

ரித்த அசுராள் குலத்தைமடித்தோனே
ள்ஜலத்தைஉடனேயழைத்தபெருமானே

ன்குறத்தி அருகேயிருக்கும்வடிவேலா
க்துவரமே யளிக்குங்குணசீலா

## விநோதபரமானந்தக்கீர்த்தனை

இராகம்—தேசிகதோடி—தாளம்—திரிட

## வங்காரமார்பிலணி என்றமெ

### கண்ணிகள்.

பண்டாரவேடவடிவாகி புன
வண்டாடுமேககுழல் மாதுகு

திண்டோளினல்
ஆவலோடுபோக சுகமளித்

அஞ்சாததானவர்கள் சேனைகளை
நெஞ்சாரவேலதனை எவி

பஞ்சாகநாலுதிசை
ஊதியருள் ட

சிங்காரரூபமயில் வாக
சங்கீதசாரமதை நீ

கங்காளநாதர்தொழ
தேசமதும்

பொல்லாதவேசயர்கள் மாய
நல்லோர்கள்நேசமதை

எல்லோருமேபுகழும்
மீதுவளர்

———

## ...நோதபரமானந்தக்கீர்த்தனே.

...இராகம்—காபி—தாளம்—சாப்பு.

### இசைந்தவடு மென்றமெட்டு.

### கண்ணிகள்.

...தாளும்திருமுகமேவிய முருகோனே
...நீதுதயின்றிடுமாயவன் மருகோனே

...சைமயில்மிசைஏறிடும் வடிவேலா
...ன்வரும்பொழுதாளுவாய் குணசீலா

...னும்தினேயுமருந்திய கனிவாயா
...ர்மலரடிதொழுதிடு முயர்தூயா

...ல்கவசமும்சூடிய பிரகாசா
...பரங்கிரிவாழ்திகழ் குமரேசா

---

...தசிகதோடி—தாளம்—சாப்பு.

### ...மகன்குக னென்றமெட்டு

### கண்ணிகள்.

...னி ஆண்டருள்வாய்தர்ப்பாசனி
உருகிமிகவாடுறேனே
பெண்மானே
...டும் தங்கும் சங்கரி(அன்னே)

பரமன்காளத்தீசர்பாரி
நாரி
... மகிழும் பகவதி(அன்னே)

நொந்துநான்வாடுறேன்தாயே நோயற்றவ
தந்தைதாய்தெய்வம்
தருணம் உனது கருணை மழை

பார்புகழ்பாளையம்க்ஷேத்ரன் பழுதில்லாபூ
சீர்வளர்பங்கய
தீட்சண்யன் காமாக்ஷியை

---

## இராகம்-ஆனந்தபைரவி—தா

பல்லவி.

அம்மாமதுரைமீனாக்ஷி அஞ்ச
ஆள்வாய் கரு

அநுபல்லவி.

செம்மான்றனையேந்திய செ
தென்னன்றவத்துதித்த செ

சீமையிலுனைப்போல்மகிமை யுடை
சிறியேனெனையாள்வாயே

தேசமன்னர்கள்பூஜிதைசெய ராஜ
திக்குப்பாலகர்திகிலடைந்திட திக்

தையல்காஞ்சனமாலை த
சந்திரவதனமுள்ள த

செய்யகருடனேறும் தி
சிலம்பன்றனைப்பயந்த

நாதபரமானந்தக்கீர்த்தனை.

மகிழ்வாய் கிருபைபுரிந்து
னம் தருவாய்

யமேறி சேயன்முன்வருவாய்
ாசன் காமாக்ஷி

மாலைசூடிடும்
லியே மலைநீலியேஉயர்சீலியே

மதுரைமீனாக்ஷி

---

—தோடி—தாளம்—ரூபகம்.

னய்யனே என்றமெட்டு.

பல்லவி.

போற்றினேன்
றை தினமேபுகழ்
குடிமேவிய(ஆண்ட

அநுபல்லவி.

சங்கரன்பாலனே.
தண்டித்தவேலனே
யும் குஞ்சரிலோலனே
பக்ஷத்துடனருள்வாயெனை

ம் சிங்காரவாகனே
சேர்ந்தவைபோகனே
போற்றுந்தியாகனே
களை அருமையுடன்சிறைமீட்டிய

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ரூபகம்.

## மஞ்சுநிகர்குந்தளமின்னே என்றமெட்டு

### கண்ணிகள்.

நீலமேகசாமளவண்ணா நேமமுடனே
பூமலர்தூவிநித்தமுன்னைப் போற்றினேன்

கண்ணாஇந்தநிமிஷமேஉயர் கருடனேறியே
உனதுசேவடி தனையுமீய்குவாய்

நேமிதன்னைஏந்தும் செம்பீரா
நீதன்காமாக்ஷி சாதுவாய்ச்சொல்லும்

நெடியதமிழுக் குபகாரா

தேனில்வீழ்ந்த ஈயதைப்போலேசிந்தைகலங்கி
புந்திமயங்கி தியங்குகின்றேனிப்புவிமேலே

நல்லசிந்தையோடுமே வந்துநீயுமே
இந்தவேளையி லென்னையாதரி

சேல்விழியாள்தேவகிபாலா தேவர்கள்நாளும்
ஆவலாய்ப்போற்றும் தீதிலாதசற்குணசீலா

ஆமைரூபமான உல்லாசா
அங்கரம்தன்னில் சங்கமுமேந்தும்

ஆதிமூலமானசர்வேசா தூய்யஆரணா
திருநாரணா பரிபூரணா

திகழ்காரணாஎனை ஆதரித்தருளுவாய்நாளும்

அன்புடன்சொல்லும் பண்பதம்தன்னை
அருமையாய்ச்செவிதனில் கேளும்

---

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-சாப்பு.

ஓதிருநெல்லூர்வளரொய்யாராஎன்றமெட்டு

## கண்ணிகள்.

சீலமிகும்வேலுமயிலோனே உனை
சிந்தையில்பணிந்தேதினந்தம்நானே அண்டர்

சேனைபதியானபுண்யவானே உந்தன்
திருவருளெனு வரமதுதனை அருமையதுடனருள்புரிதினம்

சென்னிமலைதன்னில் வாழ்சீமானே
நல்லசீருடைய ஆறுமுகத்தோனே

சத்தியுமைபெற்றெடுத்த சேயா
எங்கள்தையல்வள்ளி மையல்கொள்ளும்நேயா

நாளும்சற்ஜனர்கள்அர்ஜ்ஜித்திடும் தூயா
இந்தஜகமதுபுகழ்மகிபதி திருமகளொடுதினமருவியவனே

தண்டம்செயும்தொண்டர்கள் சகாயா
ஒருதவறிலாதபவளதி வாயா

பாரறியசூரர்தனைக் கொன்று
இந்திரபட்டமதும் கட்டிவைத்தீரன்று

எனைபாதுகாரும் தீதிலாமலின்று

ஒருபழமதுதனையருந்திடு வதற்கொருநொடிதனில்
புவிமுழுவதும்பக்தியுடன் சுற்றிவந்தாய்சென்று

உனைப்பண்புடனே கும்பிட்டேனேநின்று

நேமமிகுங்காமாக்ஷியைக் காரும்
நீதிநெறிதவறுவரமதுவுந் தாரும்
உனைநிஷ்டைசெய்தேன் கஷ்டமதும்தீரும்

நவநிதியேஇளமதியே திகழ்நதியேபசுபதியே
புகழ்நெடியசேவற் கொடியுடனேவாரும்

நாவில்நித்தமும்நீ முத்தமிழைக்கூறும்

---

இராகம்—தேசிகதோடி—தாளம்—சாப்பு.

ஜாதிமாதமுதல் சேதிசுபவரு மன்றமெட்டு.

## கண்ணிகள்.

நாராயணன்றன்னைப் பாராயணம்செய்தால்
பேரானந்தமுண்டுமே கேள்மனமே
சீராகநீ யின்றுமே

நானிலந்தன்னிலுன் வாணாளெப்போதும்
வீணாகப்போக்கிடாதே வஞ்சநெஞ்ச
மானரை நோக்கிடாதே

ஈயெறும்புமொய்க்கும் சீயுடையவிந்த
காயமதுவும்பொய்யே பயனில்லா
காற்றடைத்த பையே

சந்ததம்காமாக்ஷி செந்தமிழ்வாக்கைநீ
சிந்தைதனிலே நம்புசற்குருவின்
பைந்தாள்தனே விரும்பு (நாரா)

---

## 'அடியே எந்தனுத னுனக்கென்ன சொந்த மென்ற மெட்டு.

பல்லவி.

வருவாய்வேலா வன்னமயிலேறிசீலா

அநுபல்லவி.

குருவாய்வந்தோனே குமுதவாயோனே
கோதிலாதகோழிக் கொடியேந்துவோனே

சரணம்.

சூரசம்மாரா சுகிர்தகெம்பீரா
சுருதிநாலும் தோத்தரித்திடும்தீரா

குஞ்சரிபாகா குன்றில்வாழ்யோகா
குறத்திவள்ளி கொஞ்சிமருவிடுமோகா

தனயன்காமாக்ஷி தனக்குநற்காக்ஷி
இனிமேல்தந்தாழில்லே யோர்போதும்தாக்ஷி

---

## அலைசேர்கடல்சூழுலகிலென்றமெட்டு.

பல்லவி.

குகனே அறுமாமுகனே குறமான்றனை மணந்தவனே
சோர்த்தகடப்பமுமநேர்த்தியுடன் புயமீதுமணிந்தவனே

அநுபல்லவி.

ஜெகமீதினிலேயடியேன் தியங்கியேஉருகிறேன்மிகவும்
திருவருளொளும்வரமதுதனை அருமையதுடனருள்புரிதினம்

சரணம்.

மகபதிமகள்தனை சுகமுடன்மருவிய
மன்னியபுயமதும்பன்னிரு காமுளபொன்னிகர்தேகனே

அசுமகிலுனைசித மகிழொடுபுகழ்ந்திடும்
அத்தனுமெழுந்தருளும் உத்தமநகரிலுறைபக்தனுங்
காமாக்ஷிக்கருள் குகனே

---

இராகம்—பியாக்—தாளம்—சாப்பு.

## மீனாக்ஷி ரமணா என்றமெட்டு.

பல்லவி.

ஸ்ரீராமன்மருகா ஜெயமேவுமுருகா

அநுபல்லவி.

தேடியுன்பதமே சேவித்தேனிதமே
தீதிலாதவிநோதமாமயில் மீதிலேறியேயாதரவொடென (ஸ்ரீ

சரணம்.

பிணிதீர்க்குமருந்தே பேரின்பக்குருந்தே
பிரியத்தொடுதிரு மகளோத்தினசரி
இருகத்தழுவிய பொறுமைக்குணமுள (ஸ்ரீ

பணிலங்கள்முத்துயிர்க்கும் பணைகள்மிகஜொலிக்கும்
பாளையம்பதியில்வாழும் பக்தன்காமாக்ஷிபோற்றும் (ஸ்ரீ

---

இராகம்—பியாக்—தாளம்—ஏகம்.

மாதுபாகமானவா என்றமெட்டு.

கண்ணிகள்.

திருக்கடையூர்வாசனே சேவைதாயீசனே
சிலனைக்கார்த்தவா காலனைமாய்த்தவா
தீரனேவீரனே சூரனேமாரனே
சிறுநிலவைமுடிதனிலே அழகுடனேசூடியவா
திரிபுரமெரித்தவா செஞ்சடைவிரித்தவா
சித்தனேஅத்தனே கர்த்தனேநித்தனே (திரு

அக்குமாலைபூண்டவா ஆதரிஆண்டதா
அங்கணிவாயனே அபிராமிநேயனே
அப்பனேஅய்யனே மெய்யனேதுய்யனே
அன்புடனேஎன்குரு காமாக்ஷிதமிழ்கேட்டருள்வாய்
அத்திரியைபுரித்தவா அரவமும்தரித்தவா
ஆரணாகாரணா பூரணாவாரணா (திரு

---

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

## நானிருந்தவீடிதல்ல என்றமெட்டு.

## கண்ணிகள்.

சூரனைச்சம்மாரஞ் செய்தசுப்ரமண்யனே
துங்கமோடுஉந்தன்பாகம் தொழுதேன்கண்யனே
பார்தனிலென்னைக்கண் பாரும்புண்யனே
பத்தர்முத்தர்சித்தர்நாளும் பணியுந்தன்யனே
பதிமீதுனையே மறவேன்தினமே

வாரணிந்தகொங்கைவள்ளி மகிழுந்துய்யனே
வாகுடன்வரகம் வாழுமய்யனே
வானவர்துயரைநீக்க வந்தமெய்யனே
வேறுஉதவி யாருமில்லையே
விற்பனன்காமாக்ஷி போற்றும்வீரதீரனே

---

இராகம்-பியாக்-தாளம்—சாப்பு.

## உனைநானின்று அகலேனென்று என்றமெட்டு.

## கண்ணிகள்.

ஆலவாய்தனில்வசிக்கும் அங்கயற்கண்ணி
அன்போடுவந்துஎன்னை ஆள்வாய்விற்பன்னி

ஆருந்துணை யில்லையேகார்
அந்தமுள்ள பாண்டியன்குமாரி
அரவணிந்த ஈசன்பாரி

சீர்த்தியுடன்திக் விசையம்செய்தபூரணி
சேயன்காமாக்ஷிபோற்றும் திவ்யநாரணி

தினமும்உனைத் தொழுதேன்கார்
க்ஷேமவரம் தந்தருளுமசிவி
சிலம்பன்றன்னை ஈன்றகுவி(ஆலவாய்)

---

இராகம்—பால்கோடி—தாளம்—சாப்பு.

சூரனைவதைத்தவா என்றமெட்டு.

கண்ணிகள்.

ஸ்ரீரங்கநாதனே செந்தாமரைப்பாதனே
சாரங்கமேந்தும் விநோதனே

சந்ததம்உந்தனை சிந்தையில்போற்றினேன்
தருணமென்னையாளுவாய் தருணமென்னையாளுவாய்

வெண்ணெய்யுண்டவாயனே வேதம்புகழ்மாயனே
கண்ணாலெனைப் பாரும்தூயனே

கம்சனையஞ்சவே இம்சையும்செய்துமே
காலன்பதிசேர்த்தோனே காலன்பதிசேர்த்தோனே

துளபமாலைபூண்டவா தோத்தரித்தேனுண்டவா
களபமணிந்திடும் தாண்டவா

கல்லையும்எல்லையில் நல்லபெண்ணாக்கிய
கருணையுள்ளசீமானே கருணையுள்ளசீமானே

பூமகள்மணாளனே பொறுமைசேர்குணாளனே
காமாக்ஷி தாசானுகூலனே

கற்றவர்நற்றவர் சொற்றவர்போற்றிடும்
காவிரிசூழ்நாட்டோனே காவிரிசூழ்நாட்டோனே

---

இராகம்—தோடி—தாளம்—ஆதி.

சாதரமுககுகா என்ற மெட்டு.

பல்லவி.

நீரணிந்திடும்சிவா நீதுணையே (நீ)

அநுபல்லவி.

தாரணிதனிலேநான் சஞ்சலமுடன்
சாரைவாய்த்தேரைபோல்சோர்ந்துபுலம்புகிறேன் (நீ)

சரணம்.

காசினியிலுனைப்போல் காக்ஷியளிக்கும்
கர்த்தனும்வேறு கண்டதில்லையே

மாசிலாதகாமாக்ஷி தமிழ்ப்பதம்
மாக்ஷிமையோடுகேட்டு மனமுமிரங்கலையே (நீ)

---

இராகம்—பியாக்—தாளம்—சாப்பு.

என்னலாவண்யமே என்றமெட்டு.

பல்லவி.

சுருளிமருத்துவம் சொல்லயாரால்முடியும்

அநுபல்லவி.

இருடிமுனிவர்தேவர் இருந்துதவம்புரியும்

சரணம்.

கணக்கிடமுடியாது காவடியார்களின்கூட்டம்
கண்டுதெரிசித்தோர்க்கு கருத்தினிலேதுவாட்டம்
கந்தமூலாதிகளுமித்தலம் தனிவிசேஷ்டம்

இணக்கமுடனேமாந்தர் கூடிநாளும்
இதையமகிழ்ந்துதீர்த்த மாடிநமது
இறைவன்குமரனைக் கொண்டாடிவெகு
இன்பமுடன்தோத்ரக் கவிபாடி

ஏகுமோர் செம்பீரம்
என்னவலங் காரம்
எழில்சங்கீத சாரம்
இயம்பினேனின் னேரம் (சுருளி)

கொங்குவீசும்கைலாச குகையின்காக்ஷியேகாக்ஷி

கொண்டாடும்பிரஜைகட்கு உண்டுமோஎப்போதும்தாக்ஷி
குணமுடனரும்பதமெடுத் துரைத்தேன்காமாக்ஷி

சங்குஜெயகண்டிகை முழக்கம்தினம்
சப்திக்குமோசையே விங்குவழக்கம்இந்த
தாரணியிலென்னஒரு பழக்கம்சோகி
சங்கமர்களிங்கெப் போதும்புழக்கம்

எங்குமிது போலே
ஏதுபுவி மேலே
எனதுநாவி னாலே
ஏற்குமோ சொன்னாலே (சுருளி)

---

இராகம்—மத்தியமாவதி—தாளம்—ஆதி

ஸ்ரீராமஜெயபூமா என்றமெட்டு.

பல்லவி.

கோபாலன் மருகோனே

அநுபல்லவி.

பூபாலரனுதினம்போற்றும் பொற்பா
புள்ளிமயில்மீதேறும் பொற்புள்ளகந்தா

சரணம்.

தேவாதிதேவர்புகழ் செந்தூர்தனில்வாழ்பவா
தேடிவிரும்பும்பேரை தினமும்வந்தாள்பவா

பாவாணர்கள்கொண்டாடும் பாக்யவிசாகா
பக்தன்காமாக்ஷிதாசன் பணியும்பாலாபிஷேகா

---

## இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அருணாசலந்தனிலேவளர் அரனேஉனைதொழுதேன்
திருவாய்மலர்ந்தருள்வாயெனை சிவமேஉனைத்தொழுதேன்

மையோரனுதினமேபுகழ் இறைவாஉனைதொழுதேன்
மயாளுடகணவாஉனை ஒயிலாகவேதொழுதேன்

யேறியேவருவாய்நிதம் விமலாஉனைதொழுதேன்
பதுமேபுகலாமலே தருவாய்வரம்தொழுதேன்

னில்மலையாகிய பரனேஉனைத்தொழுதேன்
மறைமுடிவே உனைதவருமலைதொழுதேன்

---

இராகம்—நாட்டைகுறிஞ்சி—தாளம்—ரூபகம்

## எக்காலத்திலு மறவேனென்றமெட்டு.

பல்லவி.

எந்நேரமும்நெஞ்சே மறவேனே எழியேன்

அநுபல்லவி.

அந்நாளையிலுண்ணமுலை அருமையோடுஅளித்தவேலனே

சரணம்.

சூரனைவென்றதீரனை யலங்காரனைஉபசாரனை
வீரனைமலைபேரனைமணியாரனைசெந்திலூரனைநான் (எந்

வாகனைவள்ளிபாகனை வச்ரதேகனைஅதிமோகனை
யோகனைமதியூகனை நாகரீகனைபிரபுடகனைநான் (எந்

பூவினில்வளமேவியதிகழ் பாளையநகர்மீதினில்வளர்
பாவலர்புகழ்காமாக்ஷிதொழும்சேவலங்கொடிவேலவன்றனை

---

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

## அலங்காரப்பெண்மயிலா ளென்றமெட்டு.

## கண்ணிகள்.

வடிவேலாநீதுணையே சோலைவளமேவிய
பழனுபுரிதனிலே வளரெனையாள்வடி (வே)

வளைந்தகூன்பிறை யணிந்தயீசரன்
மகிழ்ந்துசீருடன் பயந்தகூர்வடி. (வே)

வந்ததிருதந்தையிடம் விந்தையுடன்மந்திரமுஞ்
சிந்தையி லரைந்தவடி (வே)

வடகுவடிடிபட ஒருநொடிதனிலுயர்
படிவலம் வரும்வடி (வே)

மருப்பிலங்கிய கணபதிதுணைவனே
திருப்பரங்கிரிதனி லுறைதிருவடி (வே)

மத்தகநிகர்த்ததன உத்தமிகுறத்திதனை
சித்திரவனத்தினில் மணத்தையுமுடித்தவடி (வே)

வண்டும்துஞ்சும் கஞ்சம்தனிலுறை
பெண்டும்கொஞ்சும் விண்டும்புகழ்வடி (வே)

வட்டத்தன பட்டத்தரசியும்
இஷ்டத்துடன் கட்டிப்புணர்வடி (வே)

வஞ்சமுள்ளவம்பர்தங்கள் வம்மிசங்களெங்குங்கொன்று
தஞ்சமென்றஉம்பர்பங்கில் நின்றதிவ்யசின்மயவடி (வே)

வாராய்கலிதீராய் கெதிதாராய்அருள்
கூருய் வடி (வடி)

வடிவத்தொடு கலசத்தினில்வளர்
பொதிகைக்குரு முனிவர்க்கருள்வடி (வே)

வண்டார்குழலெண் டோளியும்
கொண்டாடிடும் திண்டோள்வடி (வே)

கடிநகருத்தம பாளையவாசன்
கர்த்தன்மலரடி போற்றும்உல்லாசன்
படிபுகழ்விற்பனன் காமாக்ஷிதாசன்
பாசுரமினியாகிலும்வெகுநேசமதுடன்கேளுமேவடி (வே)

---

இராகம்—நாட்டைகுறிஞ்சி—தாளம்—ஆதி.

ஏழைமேலின்னம்வர்மமா என்றமெட்டு.

பல்லவி.

ஜாலமேன்தயாபரனே இன்னம் (ஜா)
இதுதருமமா வருமமாஇன்னம் (ஜா)

அநுபல்லவி.

காலந்தோறுமுன் கழல்பணிந்தேனே
கருணைவைத்துநீ காக்ஷிதாபுண்யோனே (ஜா)

சரணம்.

பாருலகுதனில் வேறுதவியொரு
பேர்களுமில்லையே நீதுணையே

பாலன்காமாக்ஷி பசரும்சஹித்யம்
பாங்குடனேகேட்டும் பதிதனிலேநித்யம் (ஜா)

---

இராகம்—காபிநாருயணி—தாளம்—ஆதி.

சரச சாம தாள என்ற மெட்டு.

பல்லவி.

பரசுபாணிபாலா பன்னிருகைவேலா
பாதாரவிந்தமும் பணிந்தேன்லோலா (பரசு)

அநுபல்லவி.

சரசமாதர்கள் விரகவேதனையில்
தயங்கிடாமலென்னை தற்காரும்சுசீலா (பரசு)

சரணம்.

திருமதில்கோபுரம் சீருடன்விளங்கும்
செந்தில்நகர்வாழும் தேசிகனே

அருமையாய்காமாக்ஷி அல்லும்பகல்தோறும்
அடியிணைபணியும் ஆறுமாமுகவனே

---

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ரூபகம்.

தண்டபாணி தண்டபாணி என்றமெட்டு.

பல்லவி.

மதுரைவீரா மதுரைவீரா
உந்தன்மகிமைதனை என்னபுகல்வேனானும் (மதுரை)

அநுபல்லவி.

மாசில்லாதகாசி மன்னன்குமாரா
மாதிகன்வீட்டில் வளர்ந்தசிங்காரா
மாதுபொம்மிவெள்ளை காதலைதீர்க்குமொய்யாரா (ம

சரணம்.

கம்பளமொன்பதும் கருவறுத்தோனே
கந்துகமீதேறும் புண்ணியவானே
காளியிடத்தினில்வாளியும் வில்லும்பெற்றோனே

அடியவர்போற்றிடு மவதாரதேவா
அல்லும்பகலுமென் னருகினில்வாவா
அன்பன்காமாக்ஷியை பண்புடனேவந்துகாவா (ம

## வாழ்த்து

இராகம்—தேசிகதோடி—தாளம்—ரூபகம்.

தாசராசஎன்றமெட்டு.

சீலமுள்ளஈசனுக்கு ஜெயமங்களம்(
திகிரிதனைஏந்தும்கண்ண பிரானுக்கும்ஜெயமங்க
ஜெகமதுபுகழும்சேல்விழி யம்பிகைதிருமகளடியிணைக்(
திருப்பரங்கிரி தனிலொயிலுடன்
வாழ்ந்திடும் திசழ்வடிவேலனுக்கும்
சீரொடுபாரத மேருவிலெழுதிய
சித்திவி நாயகர்க்கும்
சிற்றிடைமேவும் குஞ்சரிவள்ளி
சேயிழை வல்லபைக்கும்
சேயிழைவல்லபைக்கும் சேயிழைவல்லபைக்கும்

சுபம்.

## விநோதபரமானந்தக்கீர்த்தனை

முற்றிற்று.

197198

# விளம்பரம்.

இங்கிலீஷ், தமிழ், தேவநாகரம், கிரந்தம் [illegible]ிய பலதினுசு புஸ்தகங்களும், புதிய தமிழ் [illegible]வல்களும், ஸ்கூல் மாணவர்களுக்கு வேண்டிய [illegible]குப்புவாரி தமிழ் இங்கிலீஷ் புஸ்தகங்களும், [illegible]ராயிங், எக்ஸர்சயிஸ் ஸ்டூடென்ஸ் நோட் புக்ஸ் களும் பேப்பர் பென்சில் பேனா முதலிய ஸ்டே ஷனரி சாமான்களும், உயர்ந்த பவுண்டன் பேனா க்களும், புட்பால் டென்னிஸ் பாட் வகையரு சா மான்களும்; எங்களிடம் நல்லசாமானாகவும் விலை சகாயமாகவும் கிடைக்கும். வேண்டுவோர் நேரி லும் வி. பி. போஸ்டு மூலமாகவும் பெற்றுக்கொ ள்ளலாம்.

உபாத்தியாயர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் தரக்கூடும்.

மு. கிருஷ்ண பிள்ளை,

ஏஜண்டு

பி. நா. சிதம்பர முதலியார் அன் கோ.

பப்ளிஷர்ஸ் & புக்செல்லர்ஸ், மதுரை.

## புதிதாக வெளிவந்திருக்கும்
## பக்திரஸ கீதங்கள்.

ஸ்ரீமான் மாம்பழக் கவிச்சிங்க நாவலராவர்கள் சகோதரர் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ **M. R. S.** வேல்ச்சாமி கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வ ரஞ்சிதமெனும் பக்திரஸகீர்த்தனம் முதற்பாகம் விலை ரூ 0—5—0

ஷை இரண்டாம்பாகம் ... ,, 0—5—0

ரெட்டிநகர் வித்வான் இராமசாமிக் கவிராயர் அவர்களியற்றிய பக்திரஸக்கீதாமிர்தம் ... ,, 0—4—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரசன்சண்முகனுர் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷிபம் அவர்கள் இயற்றிய பக்திரஸக்கீர்த்தனம் ... ,, 0—4—0

மதுரை, சபாரஞ்சித R. V. சத்திவேலாச்சாரியார் இயற்றிய குமாரக்கடவுள் பஜனமிர்தம் புதிதாக வெளிவந்தது 0—6—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P. காமாக்ஷி பிள்ளை இயற்றிய விநோத பரமானந்த கீர்த்தனம் ,, 0—5—0

**மு. கிருஷ்ண பிள்ளை,**

பி. நா. சி. ஏஜண்ட்,

புத்தக ஷாப்—மதுரை.